ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2311/46 - 2022 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2022.12.23

2311/46 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2055/E/17.

எனது இல.: BD/BD/LND/3/5/96-1.

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் அமைப்பதற்காக காணி எடுத்தல்**

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், ரில்பொல கோரளை இலக்கம் 80 எச், க்ளேன்எல்பின் கிராம அலுவலர் பிரிவில், ஹங்வெல்ல கிராமத்தில் நில அளவையாளர் நாயகம் சார்பாக பதுளை மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2007.05.14 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 80, பிற்சேர்க்கை 52, பத்திர இலக்கம் 48 - காணியின் மொத்த விஸ்தீரணம் 11.3652 ஹெக்டயார் - உப அட்டவணை 01 மற்றும்

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், ரில்பொல கோரளை இலக்கம் 80 எச், க்ளேன்எல்பின் கிராம அலுவலர் பிரிவில், ரம்புக்பொத்த கிராமத்தில் நில அளவையாளர் நாயகம் சார்பாக பதுளை மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் 2006.12.27 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 37, பிற்சேர்க்கை 43, பத்திர இலக்கம் 41 - காணியின் மொத்த விஸ்தீரணம் 2.604 ஹெக்டயார் - உப அட்டவணை 02 இல் காட்டப் பட்டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 01**

**துண்டு இல. 673**

காணியின் பெயர்: சியம்பலாகஹவத்த (ஒரு பகுதி) அங்குருபீஸ்ஸகொட பத்தன எனும் க்ளென்எல்பின்




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தோட்டத்தின் ஹிங்குருகமுவ பிரிவு; விபரம்: தேயிலை (பழைய) மற்றும் பற்றைக்காடு; உரிமை கோருவோர்: க்ளென்எல்பின் தோட்டம், பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனி; வேறு விடயங்கள்: 22 மற்றும் 33 ஆவது துண்டுகளின் பகுதி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தேவைப்படு கின்றது, அரசு எடுத்துக்கொள்வதற்காக; விஸ்தீரணம்: 0.9030 ஹெக்டயார்.

**துண்டு இல. 674**

காணியின் பெயர்: அங்குருபீஸ்ஸகொட பத்தன எனும் க்ளென்எல்பின் தோட்டத்தின் ஹிங்குருகமுவ பிரிவு; விபரம்: தேயிலை (பழைய) மற்றும் பற்றைக்காடு; உரிமை கோருவோர்: க்ளென்எல்பின் தோட்டம், பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனி; வேறு விடயங்கள்: 33 ஆவது துண்டின் பகுதி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தேவைப்படு கின்றது, அரசு எடுத்துக்கொள்வதற்காக; விஸ்தீரணம்: 1.1709 ஹெக்டயார்.

**துண்டு இல. 675**

காணியின் பெயர்: அங்குருபீஸ்ஸகொட பத்தன எனும் க்ளென்எல்பின் தோட்டத்தின் ஹிங்குருகமுவ பிரிவு; விபரம்: தேயிலை (பழைய) மற்றும் பற்றைக்காடு; உரிமை கோருவோர்: க்ளென்எல்பின் தோட்டம், பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனி; வேறு விடயங்கள்: 33 ஆவது துண்டின் பகுதி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தேவைப்படு கின்றது, அரசு எடுத்துக்கொள்வதற்காக; விஸ்தீரணம்: 9.2319 ஹெக்டயார்.

**அட்டவணை 02**

**துண்டு இல. 731**

காணியின் பெயர்: அங்குருபீஸ்ஸகொட பத்தன எனும் ஹிங்குருகமுவ தோட்டம்; விபரம்: தேயிலை (பழைய); உரிமை கோருவோர்: அரசு, பதுளை பல்நோக்கு தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டிட மொன்றை அமைப்பதற்காக கல்வித் திணைக்களத்திற்கு கையளிக்கவென அளவீடு செய்யப்பட்டுள்ளது. ஊவா வெல்லஸ்ஸ கல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்வ தற்காக காணி தேவைப்படுகின்றது, காணி எடுத்தல் நடவடிக்கை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம்: 2.604 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. எம். எல். திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை.
2022, திசெம்பர் 09.

EOG 12 - 0291

---

*திருத்தம்*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: DIV/MW/LND/3/1/2-1.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/9/2014/WS/15.

2020 ஓகத்து 27 ஆந் திகதிய 2190/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III பகுதி காணியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் கு 2458 துண்டு இல. 01 இல் குறிப்பிட்டுள்ள திகதிக்கு பதிலாக வேறொரு தினத்திற்கு மாற்றுவதனால் அந்த அறிவித்தலை கீழே குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

நீக்கப்படவேண்டிய திகதி : 2020.11.18
நீக்கப்படவேண்டிய திகதிக்கு பதிலாக மாற்றப்பட வேண்டிய திகதி : 2023.01.04

எம். எஸ். ஜானக,
பிரதேச செயலாளர்,
மாவதகம.

பிரதேச செயலகம்,
மாவதகம.
2022, திசெம்பர் 09.

EOG 12 - 0292

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: DIV/MW/LND/3/1/2-7.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/16/2017/PT/270.

2020 ஒற்றோபர் 05 ஆந் திகதிய 2196/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பகுதி III காணியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் இ.கி.வ. 1107 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 0.0127 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி நீக்கப் பட்டு அதற்குப் பதிலாக வேறொரு தினத்திற்கு மாற்று வதனால் அந்த அறிவித்தலை கீழே குறிப்பிட்டுள்ள வாறு திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

நீக்கப்படவேண்டிய திகதி : 2020.11.11
நீக்கப்படவேண்டிய திகதிக்கு பதிலாக மாற்றப்பட வேண்டிய திகதி : 2023.01.25

எம். எஸ். ஜானக,
பிரதேச செயலாளர்,
மாவதகம.

பிரதேச செயலகம்,
மாவதகம.
2022, திசெம்பர் 09.

EOG 12 - 0293